# தாமான் பூங்கா ராயா பள்ளத்தை சீரமைக்க குத்தகையாளரை மாநகர் மன்றம் நியமித்துள்ளது!


**(நமது நிருபர்)**

கோலாலம்பூர், ஆக.25- வார்டிபெர்ன் முகாமிற்கு அருகிலுள்ள தாமான் பூங்கா ராயா, ஜாலான் கெந்திங் கிள்ளானில் தடுப்பு சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் பள்ளத்தை வலுப்படுத்த குத்தகையாளரை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நியமித்துள்ளது.

சரிவு ஏற்பட்ட பகுதியில் கேன்வாசை வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் தரை அசைவு குறித்து இதுவரை எந்த புகாரும் பெறப்படவில்லை என்று மாநகர் மன்றத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் 13 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பூங்கா ராயா தற்காலிகத் தடுப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கையில் ஒரு வீடு மிகவும் மோசமாக இருப்பதாகவும் இன்னும் 2 வீடுகள் பாதிப்பின் எச்சரிக்கையில் இருப்பதாகவும் கூறப்பட்டது என்று ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஏற்பட்ட மண்சரிவு சம்பவத்தில் இந்தியாவை சேர்ந்த ஒரு பெண் புதையுண்ட



இடத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் குறிப்பிட்டார்.